**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.**

S.C.No.197/2023

Deposition of witness – PW7

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வம் | Caste | : |
| S/o. | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 23.06.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

எதிரி ஆஜர்.

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

முதல் விசாரணை

நான் தற்பொழுது உதகை மாவட்டத்தில் புதுமந்து காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.06.2020 ஆம் தேதி அன்று நான் தலைவாசல் காவல் நிலையம், சேலம் மாவட்டத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த பொழுது முதல் நிலைக் காவலர் 2668 திரு. சரவணன் என்பவருக்கு கிடைக்கப்பெற்ற மருத்துவமனை இன்டிமேஷன்

தகவலின் பெயரில் அவர் அரசு மருத்துவமனை ஆத்தூருக்கு சென்று புகார்தாரர் பெருமாள் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி தலைவாசல் காவல் நிலைய குற்ற எண்.384/2020, சட்ட பிரிவுகள் 294(பி), 323, 324 மற்றும் 506(2) ஐபிசி ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து காவல் உதவி ஆய்வாளர் திரு. சக்திவேல் அவர்கள் பார்வைக்கு வைத்தேன்.

என்னால் தயார் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 இது தொடர்பாக என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் முதல் தகவல் அறிக்கை மட்டுமே பதிவு செய்தேன் என்றால் சரிதான். விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று ஆவணத்தின் அடிப்படையில் மட்டுமே சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கை மட்டும் பதிவு செய்தேன்

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.06.23 20:04:14 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சேலம்.